**IOM உடன் இணைந்து TIP Office செயற்திட்டத்தினை ஆரம்பித்துவைத்தல்.**

திரு. சரத் டேஷ் அவர்களே, உங்கள் அறிமுக உரைக்கும், IOM இன் தலைமை அதிகாரியாக நீங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கும் நன்றி. மேஜர் ஜெனரல் குலதுங்க அவர்களுக்கும் தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணியின் உறுப்பினர்களுக்கும், IOM இல் பணியாற்றும் எனது சகாக்களுக்கும், இன்று இந்நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் எனது சகாக்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையில் ஆட்கடத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு உதவிசெய்வதற்கான, இலங்கை மற்றும் சர்வதேச பங்காளர்களுடனான ஒத்துழைப்பு மற்றும் பங்காண்மையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ள அமெரிக்க அரசின் உறுதிப்பாட்டை இன்றைய ஆரம்பம் அடிக்கோடிட்டுக் காட்டுவதை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏனையவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு பொதுவான குறிக்கோளிற்கு தம்மை அர்ப்பணித்த தொழில்வல்லுநர்கள் நிறைந்த ஒரு அறையினைப் பார்ப்பது ஊக்கமளிக்கிறது. நீங்கள் ஒரு அரசாங்கத் தகுதியில் பணியாற்றினாலும், சர்வதேச நிறுவனத்தில் பணியாற்றினாலும் அல்லது ஒரு சிவில் சமூகக் குழுவில் அடிமட்ட முயற்சிகளுக்கு உதவிசெய்தாலும், உங்கள் முயற்சிகள் அனைத்தும் ஒரு IMPACT இனை ஏற்படுத்த உதவும் - இதுவே இன்றைய செயற்திட்டத்தினைத் தொடங்கிவைப்பதன் இலக்காகும்.

இந்த செயற்திட்டத்தினை வடிவமைப்பதில் உள்ளீடுகளை வழங்கியமைக்காக தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணிக்கு நான் பாராட்டினைத் தெரிவிக்க வேண்டும் என வொஷிங்டனில் உள்ள எமது அலுவலகங்கள் கேட்டுக் கொண்டன. ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் எமது பங்காண்மையினை மேம்படுத்துவதற்கான உங்கள் உறுதிப்பாட்டினை அவர்கள் கௌரவிக்கிறார்கள்.

தேசிய ஆட்கடத்தல் தடுப்பு செயலணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை முன்னின்று வழிநடாத்திய திருமதி மயூரி பெரேராவின் முயற்சிகளைப் பாராட்டுவதற்காக ஒருகணத்தினை ஒதுக்க நான் விரும்புகிறேன். பல்வேறு அலுவலகங்களை ஒன்றுதிரட்டுவதற்கும், சிவில் சமூகத்துடன் இணைந்து இந்த முயற்சிகளை ஒழுங்கமைப்பதற்கும் அவர் மேற்கொண்ட முயற்சிகள், IMPACT செயற்திட்டத்தினைத் தொடங்கிவைப்பதற்கான தயாராதல் பணிகளில் முக்கிய பங்கினை ஆற்றியது.

இன்றைய நிகழ்வு ஒரு சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் வருடாந்தம் ஜூலை 30ஆம் தேதி அனுஷ்டிக்கப்படும் ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினத்தை அனுஷ்டிப்பதற்கு நாம் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் இது இடம்பெறுகிறது.

ஆட்கடத்தலானது உலகம் முழுவதும் உள்ள மக்களைப் பாதிக்கிறது. உண்மையில், உலகளவில் கருதப்படும் எந்தவொரு நேரத்திலும் 25 மில்லியன் பேர் ஆட்கடத்தலினால் பாதிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடத்தல்காரர்கள் அனைத்து வயது, பின்னணி மற்றும் தேசிய இனத்தைச் சேர்ந்த பெரியவர்கள் மற்றும் பிள்ளைகளை ஆட்கடத்தலுக்கு இரையாக்கி, அவர்களை தங்கள் சுயலாபத்திற்காக சுரண்டுகிறார்கள். அமெரிக்கா மற்றும் இலங்கை உட்பட உலகில் உள்ள அனைத்து நாடுகளும் இந்தக் குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

IOM இல் உள்ள எமது பங்காளர்கள், ஆட்கடத்தல் கொடுமையினை எதிர்த்துப் போராடுவதற்காக சேவ் த சில்ட்ரன் மற்றும் இலங்கையின் 11 மாவட்டங்களில் உள்ள நான்கு சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் தீவிர பங்கேற்பினை உள்ளடக்கிய ஒரு உறுதியான செயற்திட்டத்தினை வடிவமைத்துள்ளனர். இந்த நாட்டில் ஆட்கடத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை முன்னோக்கி நகர்த்துவதற்குத் தேவையான பல நோக்கங்களை இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யும். இந்த செயற்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டது போன்ற விஷயங்களை உள்ளடக்கும்:

- ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கும், பரிசோதனைகளை நடத்துவதற்கும், மற்றும் குற்றங்களை விசாரணை செய்வதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவியினை CID மற்றும் குடிவரவு குடியகல்வு பிரிவினருக்கு வழங்குதல்.
- சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகளுக்கான SOPகளை விருத்தி செய்தல்.
- பாதிப்பிற்குள்ளானவர்களை கண்டுபிடிப்பதற்கான சிறந்த உலகளாவிய தராதரங்கள் தொடர்பாக பாதுகாப்புப் படைகளுக்கு பயிற்சியளித்தல்.
- ஆட்கடத்தலை முறியடிக்கும் ஒரு முழுநேர உடனடியாக அழைக்கக்கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் பிற சேவைகளுடன் இணைக்கப்பட்ட ஒரு வலுவான பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கும் பிரச்சாரத்தினை முன்னெடுத்தல்.
- ஆட்கடத்தலை வினைத்திறனுடன் இனங்காணவும், அறிக்கையிடவும் ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- கடத்தலுக்குள்ளானோருக்கான ஒரு தங்குமிடத்தில் பணிபுரிவதற்காக ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் தங்குமிட உபகரணங்களை வழங்குதல்.

இந்த செயற்திட்டம் நிறைவேற்றும் என நாம் எதிர்பார்க்கக்கூடிய பல முக்கியமான செயற்பாடுகளை என்னால் பட்டியலிட முடியும். இந்த செயற்திட்டத்தினை விருத்திசெய்வதில் IOM அமைப்பானது நேரடியாக அரசாங்க பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றியது. அவர்கள் பல்வேறு அமைச்சுகளில் இருந்து எட்டு வலுவான ஆதரவுக் கடிதங்களை வழங்கினர். இந்த செயற்திட்டத்தின் வெற்றிக்கு அரசு பங்காளர்களின் இந்த ஆதரவு இன்றியமையாததாக இருக்கும்.

பல ஆண்டுகளாக, எமது தூதரகமானது Development Partners என்ற குழுவுடன் பங்கேற்று, ஆட்கடத்தல் எதிர்ப்பு முயற்சிகளில் பணியாற்றுவதற்காக இன்று இந்த அறையில் இருக்கும் பல அமைப்புகளுடன் காலாண்டு அடிப்படையில் பல ஆண்டுகளாக சந்தித்துள்ளது. வெற்றி என்பது ஒரே இரவில் நடக்கும் நிகழ்வு அல்ல, மேலும் ஒவ்வொரு அதிகரிக்கும் முயற்சியும் மலையை நகர்த்த உதவுகிறது. இந்த ஆண்டு, அரசாங்கத்தின் செயலணி ஒரு சில Development Partner கூட்டங்களிலும் கலந்துகொண்டதுடன் ஒத்துழைப்பதற்கும் ஆர்வமாக உள்ளது.

இந்த பிரச்சினைகள் தொடர்பான எமது பங்காண்மை மிகமுக்கியமானது - மேலும் இது பெறுபேறுகளை வழங்குவதற்காக அரசானது அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதில் வெற்றியைக் காட்டிய ஒரு பரப்பாகும். நாம் தேவையற்ற வேலையைக் குறைப்பது மட்டுமல்லாமல், இந்த ஒத்துழைப்பானது எமது முயற்சிகளை ஒருங்கிணைக்கிறது.

இந்தக் குற்றத்தைச் சமாளிப்பதற்கான ஒத்துழைப்பின் உணர்வை இன்றைய இந்த ஆரம்பம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது. கடந்த வாரம், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஆட்கடத்தலைக் கண்காணிப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்குமான அலுவலகமானது

வருடாந்த ஆட்கடத்தல் அறிக்கையினை (TIP Report) வெளியிட்டது. கடந்த ஆண்டு ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட அதிகரித்த முயற்சிகளுக்காக நாங்கள் அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம். இதன் விளைவாக மூன்று ஆண்டுகளாக அவ்வறிக்கையின் Tier 2 Watchlist நிலையில் இருந்த இலங்கை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு TIP அறிக்கையில் Tier 2 நிலைக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல் விசாரணைகளை பலப்படுத்துவதற்காகவும், ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களில் இன்னும் அதிகமானோரைக் கண்டறிவதற்காகவும், மற்றும் அரச முகவரமைப்புகளிடையே ஒருங்கிணைப்பை அதிகரிப்பதற்காகவும் ஒரு விசேட பிரிவை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம். எவ்வாறாயினும், இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன. மற்றும் எதிர்வரும் வருடத்தில் கடத்தல்காரர்கள் அவர்களது குற்றங்களுக்காகப் பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படுதல், மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் செயற்பாடு தொடர்ந்தும் அதிகரித்தல், குறிப்பாக மக்கள்தொகையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை உறுதிசெய்யும் வகையில் அம்முயற்சிகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டும், TIP அறிக்கையானது அடுத்த ஆண்டில் ஆட்கடத்தலுக்கு எதிரான தமது முயற்சிகளை மேலும் அதிகரிப்பதற்காக அரசாங்கங்களுக்கான முன்னுரிமைப் பரிந்துரைகளின் பட்டியலை உள்ளடக்கியிருக்கும். இந்த புதிய செயற்திட்டத்தை நாங்கள் ஆரம்பித்து வைக்கும்போது, பாதிக்கப்பட்டவர்களை முன்கூட்டியே இனங்காணுதல், கடத்தப்பட்ட நபர்களுக்கான சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் குழந்தை பாலியல் சுற்றுப்பயணங்களை முறியடிப்பதற்கான முயற்சிகளை பலப்படுத்துதல் ஆகியவை உட்பட்ட 2022 TIP அறிக்கையின் பல முக்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இச்செயற்திட்டம் உதவிசெய்யும் என்பது எமக்கு ஊக்கமளிக்கிறது. இது பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வ குடியேற்றத்தை ஊக்குவிக்கும், மற்றும் ஆட்கடத்தல் குற்றங்களை முழுமையாக நிவர்த்தி செய்வதற்காக நீடித்த அரசாங்க ஒருங்கிணைப்பை எளிதாக்கவும் உதவும்.

இந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவது எளிதாக இருக்காது; எவ்வாறாயினும், ஆட்கடத்தலைக் கையாள்வதற்காக நாம் இணைந்து செயற்படுகையில் அமெரிக்கா உதவ தயாராக உள்ளது என்பதை நான் உங்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறேன். அமெரிக்கத் தூதரகத்தில், இலங்கை அரசில் மற்றும் சிவில் சமூகத்தின் மத்தியில் நாம் ஆற்றுகின்ற பணியானது பாதிக்கப்பட்ட எவரும் எமது பார்வைக்குத் தெரியாமல் இருப்பதைத் தவிர்ப்பதுடன், எந்தவொரு கடத்தல்காரரும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் அல்லது சமூகங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியாது என்பதையும் உறுதிசெய்யும்.

நாம் முன்னோக்கிச் செல்லும்போது, கடத்தல்காரர்களுக்கு எதிராக வழக்குத்தொடுப்பது எவ்வாறு, பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது எவ்வாறு மற்றும் முதலில் குற்றத்தை நிகழாமல் தடுப்பது எவ்வாறு ஆகிய விடயங்களைப்பற்றி மட்டுமன்றி – பாதிப்பிற்குள்ளாகும் சாத்தியமுடைய நபர்களைப் பாதுகாப்பதற்கும், தப்பிப்பிழைத்தவர்களுக்கு உதவிசெய்வதற்கும் சமூகத்தில் அவசியமான சமூகக் கட்டமைப்பை எவ்வாறு உருவாக்குவது போன்ற விடயங்களையும் கருத்திற் கொள்வது முக்கியமானதாகும். பல தசாப்தங்களில் இல்லாத அளவிற்கு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை உள்ளாகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் இவ்விடயம் முன்னெப்போதையும் விட முக்கியமானதாக அமையும்.

IMPACT செயற்திட்டம் அதைச் செய்யும் - ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் - மற்றும் நம்பிக்கையை வழங்கும் என நாம் நம்புகிறோம். இந்த நாட்டில் ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான அரசினதும் மற்றும் சிவில் சமூகத்தினதும் திறனை பலப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்கா எப்போதும் உதவிசெய்யும். இந்நிகழ்ச்சித் திட்டத்தை தொடங்கிவைப்பதன் மூலம், அந்த நடவடிக்கைகளின் வேகத்தை கடந்த வருடத்திலிருந்து அடுத்த வருடத்திற்கு நாம் கொண்டு செல்ல முடியும்.

இந்த போராட்டத்தில் எங்களுடன் இணைந்ததற்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகிறேன்; வரவிருக்கும் பல வருடங்களுக்கு ஆட்கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான எங்கள் பங்காண்மையினைத் தொடர நாங்கள் எதிர்பார்க்கிறோம். கடத்தல் சமூகங்களை சீர்குலைக்கிறது, பொருளாதாரத்தை பலவீனப்படுத்துகிறது, அது தொழிலாளர்களுக்கு தீங்கு விளைவிக்கிறது, அவர்களை சுரண்டுபவர்களை வளப்படுத்துகிறது, சட்டரீதியான வணிகத்தை சீர்குலைக்கிறது மற்றும் மிக முக்கியமாக அது மிகக்கடுமையான தவறாகவும் உள்ளது என்பதால், அமெரிக்கா அதை எதிர்த்துப் போராட உறுதிபூண்டுள்ளது.

இந்தக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் அனைத்திற்கும் பின்னால், நாம் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள், உண்மையான மனிதர்களைப் பற்றி பேசுகிறோம் என்பதை நினைவில் கொள்ளவும். இவர்கள் எமது சகோதரிகள், எமது மகன்கள், எமது தாய்மார்கள் மற்றும் மாமாக்கள். அவர்களின் கண்ணியத்தை மீட்டெடுக்க நாம் உதவும்போது, நம்பிக்கையை மீண்டும் கொண்டு வர நாம் உதவுகிறோம்.

இந்த ஆண்டிற்கான TIP அறிக்கை வெளியீட்டு விழாவில் “ஆட்கடத்தல் செயற்பாடானது அனைத்து மக்களும் சுதந்திரமாக இருப்பதற்கான அவர்களது உரிமைகளை மீறுகிறது: தாம் விரும்பியதைச் செய்வதற்கான சுதந்திரம், தாம் விரும்பியவராக இருப்பதற்கான சுதந்திரம், தாம் விரும்பும் வாழ்க்கையை உருவாக்குவதற்கான சுதந்திரம்.” என செயலாளர் பிளிங்கன் கூறினார்.

ஒவ்வொரு தனிநபருக்கும் இந்த உரிமைகள் மற்றும் சுதந்திம் இருப்பதை உறுதி செய்வதற்கு நாம் அனைவரும் கடுமையாக உழைப்போம்.